Phone No. 4502

Regd. No. M. 5458

விலை அரை அணா

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.

MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (13—10—49) வெளியூர் (14—10—49) [ இதழ் 64

# திகைக்கவோ திடுக்கிடவோ வேண்டாம்!

## இந்து சாம்ராஜ்யந்தான் இரண்டுக்கும் நோக்கம்!

## அடிப்படை ஒன்றுதான்! நடைமுறைதான் வெவ்வேறு!

## பதைக்கவும் வேண்டாம்-பயப்படவும் வேண்டாம்!

## விழிப்படைவோம்! வீணர்களை வீழ்த்துவோம்!

ஆர். எஸ். எஸ். சங்கத்தைக காங்கிரசில சோத்துக்கொள்ள லாம் என்று காங்கிரஸ் காரியக கமிட்டி தீர்மானித்து இருப்பதை டாக்டர் பட்டாபி சீதாராமையா வரவேற கிருர்.

"குறுகிய மனேபாவம் உடையவர்களின் நெஞ்சத்தை விரி வடையச் செய்து, அவர்களுக்கும் நாட்டுப் பணி புரிய வாய்ப்பளிப்பது, காங்கிரஸ் ஊழியர்களின் கடமை யாகும."

"ஆர். எஸ், எஸ். சங்கத்தை அழித்துவிடுவது என்பது காங் கிரசால் இலகுவில நடக்ககூடியதுதான. ஆனுல் அது விரும்பக்கூடியது அலல. காங்கிரசின் கோட்பாடு எனனவென்ருல், நமமுடைய கருததுக்களை ஏறகச செய்து அதனை வெறறி பெறுவதேயனறி, அதனை அழிததுவிடுவதனறு."

—பட்டாபி—

"கொள்கையற்ற, பச்சோந்தித்தனத்தில் சிறந்த ஸ்தாபன மாகக காங்கிரஸ், இவ்வளவு விரைவில் இழிந்துவிட்டு இருப்பது, இந்தியாவிற்கு ஓர் மகத்தான அவக் கேடாகும்."

—ஜயப்பிரகாஷ்—

ஆர். எஸ். எஸ். சங்கத்தை, இத்துணைக்கண்டத்துக்கு உலகத்தில் ஒரு உயர்ந்த மதிப்பைத் தேடித்தந்த உத்தமரைக், குருதி சொட்டச் சொட்ட சுட்டுக் கொன்ற கோட்சேக்கள் மலிந்த சங்கத்தை, பலாத்காரத்தையே நடைமுறையாகக் கொண்டிருக்கும் சங்கத்தைக், கட்டித்தழுவ காங்கிரஸ் தீர்மானித்துவிட்டது. அதனை ஆதரித்து ஜீதாவுபதேசம் புரிந்துவருகிருர், உயர்ந்த ஒழுக்க சீலர், காங்கிரஸ் தலைவர், டாக்டர் பட்டாபி சீதாராமையா பந்துலுகாரு!

ஹிந்து கலாசாரத்தைக் காப்பது என்பதுதான், காங்கிரஸ் தலைவர்கள் பலரின் உள்ளக் கிடக்கை. மேலநாட்டு நாகரிகம வேறு-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம வேறு என்ற உண்மையைக் காணவே மறக்கிறவாகள் காங்கிரஸ் தலைவர்களாவர். அகிம்சா பரமோதாமம் வெறும் சந்தர்ப்பவாதம்தான் காங்கிரசிற்கு என்பது 1942 ஆகஸ்ட் கிளாச்சி அம்பலப்படுததிவிட்டது. ஹிந்து சாம்ராஜ்யம் காண்பது தான், காங்கிரசின் அடிப்படையான குறிக்கோள். ஆரிய தாமத்தை அரியாசனததில அமாத்தி அழகு பார்ப்பதுதான் அதன் ஆசை!

ஆர். எஸ். எஸ். சங்கத்திற்கும் அதுவேதான் இலட்சியம். இந்தியாவில், இந்து சாம்ராஜ்யந்தான் ஸ்தாபிக்கபபட வேண்டுமென்பது, அதன் பரிபூரண விருப்பம். காங்கிரஸ் பேசி வருவது போன்று, அகிம்சை பற்றி அலங்காரமாகப் பேச, ஆற்றல் இல்லை அலலது விரும்பவில்லை அதற்கு என்பது தான் உண்மை.

அஸ்திவாரம் ஒன்ருகவே இருக்கிற காரணத்தாலதான், இரண்டு ஸ்தாபனங்களிடையில் சிறிது நாளைக்கு முன் ஊடலும், எதிர்காலத்தில் இடையரு இன்பம் பெற, கூடலும் நிகழ்கிறது இன்று! இதைக் கண்டு ஒருவரும் ஆச்சரியப்படத் தேவை இல்லை!

பலாத்காரத்தை, தங்கள் இலட்சிய வெற்றிக்குச் சாதனமாகக் கொண்டிருக்கிருர்கள் கம்யூனிஸ்டுகள் என்று கூறி, கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தையே சட்ட விரோதமான ஸ்தாபனமாகஆக்கஆலோசனைகூறும்காங்கிரஸ் ஸ்தாபனம், அதே பலாத்காரத்தில் நூறுமடங்கு கூடுதலாக நம்பிக்கைகொண்டு, நாட்டுக்கு நல்ல நிலை தேடித் தந்த தூயவரையே கொன்றுவிடும் அளவிற்கு கொலைவினையைப் புரிந்து மகிழ்ந்த, ஆர்.எஸ் எஸ். ஸ்தாபனத்தோடு காந்தர்வ மணம் புரிந்துகொள்ள முனைவதற்குப் பொருத்தமான காரணம் வேண்டும்— அறிவியல் விளக்கம் வேண்டும்.

கம்யூனிஸ்டுகளையாவது பலாத்காரத்திலே கண் என்ற காரணங் காட்டிக் கருவறுக்க முடிகிறது, காங்கிரஸ் ஸ்தாபனத்தால்! ஜயப்பிரகாஷ் தலைமையில உள்ள சோஷலிஸ்ட் கட்சிக்கு அந்தக் களங்கம் இருப்பதாக இதுவரையில, காங்கிரசில் உள்ள பெருந்தலைவர்களும் சரி, குட்டித் தலைவர்களும் சரி, குற்றஞ்சாட்டினது கிடையாது. அதனை விரட்டி விட்டது காங்கிரஸ் ஸ்தாபனம்! ஏன்? என்ன காரணம் இதற்கு?

கம்யூனிஸ்டுகள் — காலிகள்! பலாத்காரவாதிகள்! ஆதலால் அழித்தொழிக்க வேண்டும்!

சோஷலிஸ்டுகள்............? அவர்களையும் மட்டம் தட்ட வேண்டும்!

ஆர். எஸ். எஸ். சங்கம்— பலாத்காரக் கோட்பாடு உடையதுதான்! மதவெறி கொண்டதுதான்! இவ்வளவும் காங்கிரஸ் தலைவர்கள் முன்னுள் கூறினது! இன்று, திரும்பப் பெற்றுக் கொள்ளுகிருர்கள், அதனை, அதே தலைவர்கள்! பொருந்தாமாற இல்லையே, இது என்று உங்களுக்குத் தோன்றலாம்! ஆனுல் காங்கிரஸ் தலைவர்

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

## போதாது— நெருக்கடி தீராது!

"ஜனங்களிடைப் பணப் புழுக்கம் அதிகமாயிருந்த போது ஜவுளி விலை எவ்வளவுதான் அதிகமாயிருந்தபோதிலும், அது விற்பனையாகிவந்தது. ஆனுல் தற்பொழுது பணப் புழுக்கம் குறைந்து விட்டது. அதாவது இத்தகையப் பண்டங்களை வாங்க ஜனங்களுக்கு இருந்த சக்தி மட்டுப் பட்டுவிட்டது; மேன் மேலும் மட்டுப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஜவுளி விலையைப் பத்து சதவிகிதம் குறைப்பது போதியதா? இவ் விலை ஏற்கனவே 300 அல்லது 400 சதவிகிதம் உயர்ந்து நிற்கிறது. இதில 10 சதவிகிதம் தள்ளுவதால் ஜவுளிகளுக்கு சிறிதளவு கிராக்கி ஏற்படலாம். எனினும் இத்தொழிலில் தற்போது ஏறபட்டுள்ள நெருக்கடி தளரவோ, ஜனங்களின் தேவை முறைப்படி பூர்த்தியாகவோ, இந்த விகிதம் போதியதென்று நாம் எண்ணவில்லை."

—'சு. மி.'

## தமிழில் பெயர் வைத்துக்கொள்வது தவரு?

## 'அடிமை' என்ற சொல் இந்திப்பற்றுக்கும் பொருந்தும்

சென்னை மாநிலக் கல்வித்துறை அமைச்சராகப் பதவி கிடைக்கப் பெற்ற தோழர் மாதவமேனன், தஞ்சாவூர் மாவட்டத்திலே சுற்றுப் பிரயாணம் செய்கையில், திருவையாற்றில்,

"சிறந்த அறிவாளிகளும் சமஸ்கிருதம் கலந்திருக்கிறதென்பதறகாகத் தங்கள் பெயர்களை மாற்றிக் கொள்கிருர்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஆங்கில பாஷை நம் மொழியில் கலந்துவிட்டதைப் பறறியாரும கவலை கொள்ளவில்லை. நீண்டகால அன்னியன் ஆட்சியால் இந்த அடிமைப்புத்தி வந்து விட்டது" என்று கூறியுள்ளார்.

பெற்ருேர்கள் ஏதோ ஒரு மொழியில் வைத்துவிட்ட பெயரை அறிவு வந்தபிறகு தஙகள தாய்மொழியில் மாறறிவைத்துக் கொளவதைப் பற்றி ஓா அமைச்சா, அதிலும் கல்வியமைச்சா ஆச்சரியப்படுகிருா என்ருல், இவருடைய போக்கைப் பற்றி நாம் ஆசசரியப்படாமல் இருப்பதற்கில்லை அல்லவா?

தமிழன் தன் தாய்மொழியான தமிழில பெயர் வைத்துககொள வதைக்கண்டு ஆச்சரியப்படும் மனிதர் எத்தகையவராயிருத்தல் வேண்டும்? இவருடைய கருத்து என்னவாயிருத்தல வேண்டும்? இவருடைய கல்வித்துறை நிர்வாகம் எந்தப் போக்கைக் கொண்டதாயிருக்கும்?

ஆங்கில பாஷை கலந்திருப்பதை இந்த அமைச்சர் எடுத்துக காட்டுகிருர். ஆஙகிலம் அரசியல வாழ்வில தான் கலந்தது என்பதையும். அதற்குக் காரணம் அப்போது நடைபெற்ற ஆஙகில ஆட்சியேதான என பதையும், தமிழ் ஆட்சி நடந்தால், ஆஙகிலம் பேச்சளவில்கலந்திருப்பது மறைந்துவிடும் என்பதையும் ஆங்கிலம் தமிழனின் பெயரிலோ, தனி வாழ்விலோ, தமிழ் இலக்கியத்திலோ புகுந்து, தமிழன் வாழ்வைக் கெடுக்கவில்லை என்பதையோ கல்வியமைச்சர் அறியவில்லை போலும்! அறிய முடியவில்லை போலும்! ஆஙகிலம் அன்னிய நாட்டு மொழி. அன்னியா ஆட்சியில் அதை அரசியல் மொழியாக்கித் திணித்தனா அதன் பயனுகத் தமிழரை விடச் சமஸ்கிருதிகளே அதனை அதிகமாகப் பயிலவும் பேசவும், வாழ்க்கையை ஆஙகில முறையில் அமைத்துக் கொள்ளவும் தொடஙகினா என்பதைத் தோழா மாதவமேனன் அறிய முடியுமா?

அதே போல, சமஸ்கிருதமும் தமிழ் நாட்டுக்கு அன்னிய மொழியே. 300 ஆண்டுகளுக்கு முன் வந்தது ஆங்கில அன்னிய மொழி என்ருல், 3000 ஆண்டுகளுக்கு முன் வந்தது சமஸ்கிருத அன்னிய மொழி. சமஸ்கிருதம் தமிழ் நாட்டிலே தமிழா மொழியாகிவிடவில்லை. இன்றளவும் அது தனி மொழியாகவும் அன்னிய மொழியாகவுமே தமிழர்களால் கருதப் பட்டு வருகிறது. எனவேதான் தமிழர்கள் தங்கள் வாழ்விலும், இலக்கியத்திலும், பெயர்களிலும் ஆதிக்கம் பெற்றுக் கொண்டிருக்கும் இந்த அன்னிய மொழியையும் தலைமுழுகித் தொலைத்துவிட வேண்டுமென்று தமிழர்கள் முயன்று கொண்டிருப்பதில் தவறு என்ன இருக்கிறது! ஆங்கில மொழிப்பற்று நீண்ட கால அன்னிய ஆட்சியால் ஏற்பட்ட அடிமைப் புத்தி என்ருல் சமஸ்கிருத மொழிப்பற்று அதைவிட நீண்ட கால அன்னிய ஆதிக்கத்தால் ஏற்பட்ட முழு அடிமைப் புத்தி என்பதில் தவறு என்ன இருக்கிறது.

கல்வியமைச்சரின் சேரநாட்டுத் தமிழ், நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம தோற்றுவித்த சேரத்தமிழ், இமயத்தில் இலச்சினை பொறித்த வீரர்களைப் பெற்றெடுத்த சேரத் தமிழ் இன்று மலையாளமாக மாறிப் போய்விட்டதற்குக் காரணமும் சமஸ்கிருத ஆதிக்கத்தினுலும் அந்த அன்னிய மொழியில் கொண்ட மோகமும் அடிமைப் புத்தியுமே என்பது தவருகாது அல்லவா?

ஆனுல் இவைகளை யெல்லாம் பாபம் கல்வியமைச்சர் எஙஙனம் அறிவார்!

அறியாத இந்த அமைச்சர் என் வீணில் ஊரைசசுற்றித் தெரியாத விஷயஙகளிலெல்லாம தலையிட்டு, பொதுமக்கள் பணத்தைச் சுறறுப் பிரயாணச் செலவுக் கணக்கில் கரைத்துக்கொண்டிருக்கவேண்டும்?

சமஸ்கிருதத்தில் கல்வியமைச்சருக்கு ஏறபட்டிருக்கும ஆர்வத்தினுல், அந்த மோகத்தில் மூழ்கி, தமிழ்மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட இந்த நாட்டிலே, அதுபறறிப் பிரசாரம் செய்ய, தமிழர்களைக் கிண்டல் செய்ய, இவர் அரசாஙகத்தாரின் பணத்தைச் செலவு செய்வது பொதுமக்களுக்குத் தீமை செய்வதாகும். மேலும தமிழைப்பரப்ப முயலாமல் அதறகான ஏற்பாடு செய்யாமல், சமஸ்கிருதம் பற்றிப் பேசிக் கொண்டு திரிவது நாட்டு மொழிக்குத் துரோகம் செய்வதாகும்.

# மாலை மணி

சென்னை 13—10—49 வியாழக்கிழமை


# குடியாட்சிக் 'கோலாட்சி' ஆகிறது!

"அரசியல் அமைப்புச் சட்டத்தில், குடியரசுத் தலைவர் செய்யும் திருத்தங்களை, ஆய்ந்து பார்த்து நீதி வழங்கும் உரிமை நீதிமன்றத்துக்குக் கிடையாது என்பதை, வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தும் முழு அதிகாரமும், தனிப்பட்ட மனிதருக்கோ அல்லது தனிப்பட்ட ஒரு குழுவுக்கோ இருக்கக்கூடாது, சட்டசபைக்கே உரித்தானதாக இருக்க வேண்டும்.

எட்டாவது ஷரத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளின்படி, உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள, நீதிமன்றத்தின் மூலம் முயற்சிக்கலாம் என்று அளிக்கப்பட்டுள்ள உரிமை, 'பின்புற வழி முறை'யால் பறிக்கப்படுகிறது இப்பொழுது. உலகம் முழுவதற்கும் 'தம்பட்டமடிக்கப்பட்ட' அடிப்படை உரிமைகளில், குடியரசுத்தலைவர், தம் விருப்பப்படி திருத்தம் செய்து கொள்ள ஏது இருக்கிறது; இந்தப் புதிய ஷரத்தின் மூலம்"

என்று எக்காளம் இட்டு நிற்கிறார், அரசியல் அமைப்பு மன்றத்தில், தோழர் பண்டித தாகூர்தாஸ் பார்கவா. அவரது எக்காளம் உரிமை வேட்கையால் எழுப்பப்பட்ட எக்காளமாகும். எப்பொழுதும்போல், இந்த உரிமை வேட்கை எக்காளமும், அதிகாரத்தின் 'செவிட்டுக்'காதில் விழவில்லை. 'பாசிசம்', தன் சர்வாதிகாரப் பெருநடையைப் பெருமிதத்துடன் போட்டுக்கொண்டு தான் சென்றுள்ளது; வழக்கம் போல!

'குடியரசைத்', 'தடியரசாக்கும்' அரிய பணி, அரசியல் அமைப்பு மன்றத்தில், நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. குடியரசுத் தலைவனைப் 'பாசிசக்' கோல் வல்லரசுத் தலைவனாக ஆக்கிடும் 'சிருஷ்டி கர்த்தர்கள்'ப், பலர் அரசியல் அமைப்பு மன்றத்தில் இருந்து வருகின்றனர். அவர்களிலே, முக்கியமானவர்களாகத் தங்களை அடிக்கடி காட்டிக்கொள்வதிலே, தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் தோழர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் தவறுவதில்லை.

குடியரசுத்தலைவருக்கு இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கும் சர்வாதிகாரம், போதாது என்று கருதி, புதிய சர்வாதிகாரம் ஒன்றை, அரசியல் அமைப்புச்சட்டம் 307வது பிரிவின் மூலம் கொடுக்க முயலுகிறார் தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். அதற்கு ஒத்து ஊதியுள்ளார்கள், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் உள்ளிட்ட பலர். அதாவது நடைமுறையில் இருக்கும் சட்டங்களை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கேற்ப திருத்திக்கொள்ளவும், மாற்றியமைத்துக்கொள்ளவும் குடியரசுத் தலைவருக்கு முழு அதிகாரத்தை அளிக்கிறது என்பதும், அப்படி அதிகாரத்தைச் செலுத்தும் போது, அது குறித்து நீதிமன்றம் ஏறி வழக்காட யாருக்கும் உரிமையில்லை என்பதும் நிறைவேற்றப்பட்டுள்ள 307-வது பிரிவின் நோக்கமாகும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் எட்டாவது பிரிவின் கீழ், மக்களுக்கு அடிப்படை உரிமைகள் அத்தனையையும் வழங்குவதுபோல வழங்கிவிட்டு 307-வது பிரிவின் கீழ் வருவதற்குள், ஒவ்வொரு அடிப்படை உரிமையாகப் பல உரிமைகளைப் பல பிரிவுகளின் கீழ்ப் பிய்த்தெடுத்துக் கொண்டே வந்து, இறுதியில் 'உயிரற்ற—மனித வாழ்வின் எலும்புக்கூட்டை'க் காட்டுமளவுக்கு, இந்திய அரசியல் அமைப்பு மன்றம் 'முன்னேறி'யிருக்கிறது.

சட்டத்தைத் திருத்துவதோ, அல்லது அதை மாற்றுவதோ, பாராளுமன்றத்தின் உரிமையாக இருப்பதல்லவோ, குடியாட்சி முறையின் சிரிய பண்பாகும். அந்த உரிமையைக் குடிகளின் பிரதிநித்வம் வாய்ந்த பாராளுமன்றத்திற்கு அளிக்காமல், தனியொரு தலைவனுக்கு அளிப்பதென்றால், அதைக் குடியாட்சி என்று எப்படிக் கொள்ள முடியும், அறிவுப் பழுது அற்றவர்களால். எனவே தான், தோழர் பார்கவா போன்றவர்கள், மக்களின் உரிமையைக் காக்கப் பெரு முழக்கமிட்டுப் பா[illegible]றார்கள்.

அமெரிக்க [illegible]கத்தில் கூட அடிப்படை [illegible] உரிமைகள் பாதிக்கப்படும்போது, நீதிமன்றம் ஏறி நீதிபெற்றுக்கொள்ள அனுமதியும், வசதியும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய அனுமதியும், வசதியும் முசோலினி, ஹிட்லர் ஆட்சிகளில் மட்டுமே மறுக்கப்பட்டு வந்தன. இப்பொழுது இந்தியத் துணைக்கண்ட ஆட்சியில் அந்த உரிமை மறுக்கப்படுகிறது. இதுபோல், முன்பே பல உரிமைகள் பறிக்கப்பட்டுக் கவர்னர்களிடத்திலும், மத்திய அரசாங்கத்தினிடத்திலும், குடியரசுத் தலைவரிடத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. 'உரிமை பறிக்கும் வேட்டை' இன்னமும் எந்த எந்த நிலையிலெல்லாம் நடைபெறப் போகிறதோ! நினைக்கவே திடுக்கிடுகிறது! தடி எடுத்தவன் தண்டக்காரன் என்ற முறையில் காங்கிரஸ் அரியணையில் அமரப்பார்க்கிறது! ஆகவே முடிந்தமட்டும் 'ஆட்டம் ஆடிப் பாட்டுப்பாட' எண்ணுகிறது! விழிப்புற்றெழும் எதிர்காலமேதான் அதற்கு முடிவு கட்டும்—கட்ட முடியும்! அதுவரையில் உரிமை வேட்கையை உருவாக்கும் பணியை நல்லவர்கள் செய்து வரவேண்டியதுதான்!

குடியாட்சித், தனி மனிதனின் 'கோலாட்சி'யாக மாற்றப்படுகிறது இன்று! உரிமை வேட்கையின் உரத்தகுரலை, நாட்டின் பெருங்குடி மக்கள் கேட்டு, உணர்ச்சி பெற்று எழும் காலமே, 'கோலாட்சி'யைக் குடியாட்சியாக மாற்றும்! அந்த நற்காலத்தை எதிர்பார்ப்போமாக!

## மாறுதல் ஏற்படாது

"துணிமணிகளின் விலை 10 சதவிகிதம் குறைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய நிலையில், இந்த முடிவினால் என்ன மாறுதல் ஏற்படுமெனத் தெரியவில்லை".

—தினமணி—


## "மாலை மணி"

20—10—49 முதல்

ஆறு பக்கங்களோடு வெளிவரும்

விலை அணா ஒன்று

ஏஜண்டுகளுக்கு;— "மாலை மணி" ஏஜண்டுகள் 20—10—49 (சென்னை) 21—10—49 (வெளியூர்) முதல் "மாலை மணி" பிரதி ஒன்று, ஒரு அணா வீதம் விற்கவேண்டும். ஏஜண்டுகள் தேவைக்குரிய பிரதிகளுக்கு 18—10—49-க்குள் தெரிவித்துக்கொள்வதுடன், பிரதி ஒன்றுக்கு ரூ. 2—8—0 வீதம் முன்பணம் அனுப்பவேண்டும்.

சந்தாத் தோழர்களுக்கு:—"மாலை மணி" சந்தாதாரர்கள், தாங்கள் அனுப்பியுள்ள சந்தா தொகைக்குரிய பத்திரிகைகள் மட்டும் 20—10—49 முதல் அனுப்பப்படும். தொடர்ந்து குறிப்பிட்ட காலம் வரையில் பத்திரிகை அனுப்பப்பட வேண்டுமானால், அதற்குரிய அதிகப்படியான தொகையை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—மானேஜர்.


# உலகக்கூடம்

['சம்மட்டி']

## கொடு......கொடு கொடு......

## கொடு கொடு கொடு........!

கொடு கொடு—எதைக் கேட்டாலும் கொடு—நிலம் கேட்டால் கொடு, நிதி கேட்டால் கொடு, பத்தரை மாத்துத் தங்கம் கேட்டால் கொடு, வெள்ளி கேட்டால் கொடு, வைடூரியம் கேட்டால் கொடு, பட்டு பட்டாடை கேட்டால் கொடு, புலித்தோல் ஆடை கேட்டால் கொடு, பத்தடுக்கு மாளிகை கேட்டால் கொடு, பர்ணசாலை கேட்டாலும் கொடு, தடி கேட்டாலும் கொடு, யோகதண்டம் கேட்டாலும் கொடு, அரை நாண் கேட்டாலும் கொடு, பூணூல் கேட்டாலும் கொடு, பாதரட்சை கேட்டாலும் கொடு, பாதக்குறடு கேட்டாலும் கொடு, எதுகேட்டாலும் கொடு போதும் போதும்-வேண்டாம் வேண்டாம்-என்கிற வரையில் கொடு!

'சம்மட்'டியாரே! இப்படி எங்கே தானம் கொடுக்கிறார்கள்? சீக்கிரம் சொல்லுங்கள்! தீர்ந்து விடப்போகிறது!' என்று என்னைக் கேட்டுவிடாதீர்கள்.

நீங்கள் மாபாரதம் படித்திருக்கிறீர்களா? அதிலே கர்ணன் என்று கொடைக்குப் பேர் போன, ஒரு ஆசாமியைக் காட்டுகிறாரே வியாசர், அறக்கற்பினளான குந்தியின் மகனை, அந்தக் கர்ணனை நினைத்துக் கொள்ளாதீர்கள். அல்லது 'குபேரகுசேலா'வில் 'கொடு கொடு எது வேண்டுமானாலும் கொடு' என்று நகைச் சுவை அரசர் என். எஸ். கே நம்மை வயிறு வலிக்கச் சிரிக்க வைக்கிறாரே, அதனையும் நினைத்துக் கொள்ளாதீர்கள். அப்படி எண்ணிவிட்டால், கண்டிப்பாக ஏமாற்றம் அடைந்து விடுவீர்கள்! எச்சரிக்கை. அப்புறம், அதற்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன்.

ஆனால், பாரத கர்ணன் நடந்து காட்டினதாகச் சொல்லப்படுகிறதே, அதே மாதிரி இப்ப நாட்டிலே ஒரு சம்பவம் நடந்து கொண்டு இருக்குது, ஐயா, இருக்குது!

அந்தக் கர்ணன் கெட்டான் போங்க! அவன், இப்ப நடப்பதைக் கண்டால், வெட்கிப்போய், தலையை எங்காவது கண்டு வளையாகப் பார்த்து நுழைத்துக் கொள்வானுங்க! அவ்வளவு பெரிய தர்ம காரியம் நம்ம நாட்டிலே நடந்துகொண்டு இருக்குதுங்க!

அப்படி, கர்ணன் போல தர்மிஷ்டர் ஒருவர் இருவர் இல்லைங்க! நூற்றுக்கணக்கிலே இருக்கிறாங்க! இந்தக் கலியுகத்திலே தர்மம் கெட்டுடுத் துன்னு சில மடிசஞ்சிங்க, மாய்மாலம் செய்யுறாங்களே, அதுங்களுக்குக் கூறுகிறேன், இன்னமும் தர்மம் கெடலே, தர்மகர்த்தாக்களும் செத்துப்போகலேண்ணு!

வரப்போகிற நம்ம சுயராஜ்ய பார்லிமெண்டுக்கு, தனித்தலைவர் இருக்கப் போகிறார் இல்லையோ, அவருக்கு என்ன சம்பளம் மாதா மாதம் தெரியுமா? பத்தாயிரம் ரூபாய்கள்! இவ்வளவு பெரிய நாட்டுக்கே தலைவர் நாயகம்—அவருடைய அந்தஸ்துக்கு ஏற்றாற்போலப் பணந்தர வேண்டியது முக்கியமல்லவா? தகுதிக்கேற்பத் தானம் தரவேண்டுமென்ற தர்மம் கடைப்பிடிக்கப்படுவதைப் பாருங்கள்!

அடுத்தபடியாக இருக்கிறவர்கள் நீதிபதிகள். அவர் செய்யும் வேலையையும் குறைத்து மதிப்புப் போடுவது கூடாது. பிரஜைகளுக்கெல்லாம் நீதி வழங்குகிறவர்களுக்கு, நமது தர்ம கர்த்தாக்கள், நேர் நீதி வழங்க மறுப்பது பொருத்தமானதாக இருக்குமா? எனவே அவர்களுக்கும், திருப்தி தரும் முறையில், பிரதம நீதிபதிக்கு மாதா மாதம் 5000 ரூபாய்கள்! மற்ற நீதிபதிகளுக்கு 4500 ரூபாய்கள் முள்ளங்கி பத்தை மாதிரி! அப்புறம் மதிமிக்க மந்திரிகள் இருக்கவே இருக்கிறார்கள்! அதற்குக் கீழ்ப்படிக் கட்டில் சிவிலியன்கள் இருக்கிறார்கள்! அவர்கள் நிர்வாக இயந்திரத்தின் இரும்புத் தூண்கள்! அவர்கள் விஷயத்திலும் தர்மத்தை நிலைநாட்ட வேண்டியதுதான்! அவர்களுக்கும், மாதா மாதம் மூவாயிரத்திலிருந்து நாலாயிரம் வரை கொடுத்துவிடுவது என்று, தர்மகர்த்தாக்கள் தீர்மானித்துவிட்டார்கள்!

சபாஷ் தர்மகர்த்தாக்கள்! நீங்களாவது இருக்கிறீர்களே, தர்மம் நசித்து அதர்மம் தலைவிரித்தாடும் இந்தக் காலத்தில்! அதிகாரிகளுக்கெல்லாம் நல்ல நீதிதான் வழங்கி இருக்கிறீர்கள்! நீங்கள் எல்லாம் கர்ண மகாராஜாக்கள் தான்! ஆனால் இந்த நாட்டில் உள்ள கோடானுகோடி ஏழை மக்களை மறந்துவிட்டீர்களே! கொஞ்சம் அந்தக் கர்ண குணத்தைக் காட்டி இருக்கக்கூடாதா, அவர்கள் விஷயத்தில் இந்தத் தர்ம காரியத்துக்குத்தான், சொந்தத்தில் கோடிக்கணக்கில் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டிருக்கிறீர்களே, உங்களிடத்திலிருந்து எப்படி ஏழை மக்கள் நீதியை எதிர்பார்ப்பது! முடியாதுதான்! கொடுங்கள் கொடுங்கள்-தாராளமாகக் கொடுங்கள்-சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள்-அதிக அதிகமாகச் சாப்பிடுங்கள்! மறு சமயம் வாய்ப்பது அரிது!

## உண்மை பேசுகிறார்

"காந்தியார் பலியானதிலிருந்து இந்தப் பதினெட்டுத் திங்களாக, நமக்காக அவர் வகுத்துக் கொடுத்த பாதையில் நாம் எவ்வளவு தொலைவுக்கு முன்னேறி இருக்கிறோம் என்று யோசித்துப் பார்த்தால், அத்துறையில் நாம் தவறி விட்டோம்—தோற்று விட்டோம் என்றுதான் ஒத்துக் கொள்ள வேண்டியவர்களாகிறோம்."

—பட்டேல்—

# திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழாக் கூட்டங்கள்

## 16-10-49

கோவை:— சி.என. அணணுதுரை. எஸ. ஆர். சுப்பிரமணியம, பெத்தாமபாளையம பழனிச்சாமி.
புதுக்கோட்டை:— (காலை) இரா. நெடுஞ்செழியன
திருச்சி:— (மாலை) இரா. நெடுஞசெழியன், எஸ். அப்பாவு.
விருதுநகர்:— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத தம்பி.
மதுரை:— டி. கே சீனிவாசன், ஏ. அய்யாசாமி
தூத்துக்குடி:— காஞ்சி. கல்யாணசுநதரம, மு. கருணாநிதி.
வேலூர்:— சி. பி. சிற்றரசு, கே. ஏ மதியழகன.
குறிஞ்சிப்பாடி:— காஞ்சி. மணிமொழியார், இரெ. இளம் வழுதி.
தஞ்சை:— ஈ. வெ. கி. சம்பத், என். எஸ். இளங்கோ, இராமாமிர்தத்தம்மையார், எஸ். எஸ். மணி
திண்டுக்கல்:— எஸ். கே. சாமி, தங்கப்பழம், இரா. துரைராசன்
வடக்கனந்தல்:— த. மா. திருநாவுக்கரசு
திருச்செங்கோடு:— ஜி.என், ராஜு, எம.எஸ். ராமசாமி
திருவனந்தபுரம்:— க. அன்பழகன்

## 17-10-49

ஓமலூர் :— (காலை) சி. என் அண்ணுதுரை, ப. கணணன, ஏ சிதறையன்
சேலம்:— (மாலை) சி என. அணணுதுரை, ஏ. சித்தையன்.
கோவில்பட்டி:— காஞ்சி கலயாணசுந்தரம, மு. கருணாநிதி.
மாயவரம்:— இரெ. இளமவழுதி, டி. கே. சீனிவாசன்.
திருப்பத்தூர்(வ ஆ.):— கே. ஏ. மதியழகன். சி. பி. சிறறரசு.
லால்குடி:— என. வி. நடராசன, ஏ. வி. பி. ஆசைத் தமபி
இராமனுதபுரம் (முகவை):— இராமாமிரதத்தமமையார்

## 18-10-49

உடுமலைப்பேட்டை:— சி. என். அண்ணுதுரை, எஸ். ஆர். சுப பிரமணியம, பி. பழனிச்சாமி
பட்டுக்கோட்டை:— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத தமபி, இரெ. இளம்வழுதி. என். எஸ். இளங்கோ
கல்லிடைக்குரிச்சி:— காஞ்சி. கல்யாணசுந்தரம்

## 19-10-49

திருவெறும்பூர் :— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத் தம்பி.
விழுப்புரம்:— சி. பி. சிற்றரசு, சி. டி. டி. அரசு
பல்லடம்:— மாலை 3-மணிக்கு — சி. என். அண்ணுதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம், பி. பழனிச்சாமி, ஜி. என். ராஜு
திருப்பூர்:— மாலை 7-மணிக்கு — சி. என். அண்ணுதுரை, எஸ்.ஆர். சுபபிரமணியம, பி. பழனிச்சாமி. ஜி. என். ராஜு
சங்கரன்கோவில்:— காஞ்சி. கல்யாணசுந்தரம்
திருச்சேறை :— ஈ. வெ. கி. சம்பத், எஸ், கே. சாமி

## 20-10-49

விருதாசலம் :— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத் தமபி.

## 21-10-49

மன்னார்குடி:— ஈ. வெ. கி. சமபத, இராமாமிர்தத தமமையார், எஸ். கே. சாமி

## 22-10-49

சிதம்பரம்:— ஈ. வெ. கி சம்பத், இராமாமிர்தத் தம்மையார், எஸ். கே. சாமி
ஆற்காடு :— காஞ்சி. கல்யாணசுந்தரம, கே. ஏ. மதியழகன்

## 23-10-49

காஞ்சிபுரம்:— சி. என். அணணுதுரை, கே. அன்பழகன, சத்தியவாணிமுத்து. சி. டி. டி. அரசு. ஏ ஆர வெங்கடராமன்.
திருவாரூர்.— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத்
திருவண்ணமலை:— சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்
கடலூர் (ஓ டி.) :— ஏ சித்தையன, என. வி. நடராசன்
சுண்டக்காமுத்தூர் :— ஜி என். ராஜு

## 21-10-49

திருத்துரைப்பூண்டி:— ஈ வெ. கி, சம்பத

## 25-10-49

கூடலூர் (மதுரை) :— ஏ. வி. பி. ஆசைததம்பி

## 26-10-49

தேனி:— ஏ. வி. பி ஆசைத்தம்பி

## 30-10-49

நாகப்பட்டினம் :— இரா நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சமபத

# இனி நடப்பவை

சாத்துமாநகர்— சென்னை திருவொற்றியூரையடுத்த சாத்துமா நகரில் 15-10-49 சனிமாலை 4மணிக்கு இந்நகர் ஒய். எம். சி. ஏவின் 4வது ஆண்டு விழா நடைபெறும். அதுபோது தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் தோழர்கள் சிவப்பிரகாசம், இரா. நெடுஞ்செழியன் எம். ஏ, சஞ்சீவி, தோழியர் சீதாலட்சுமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். எனத்தோழர் எம். வி. ராஜன் எழுதுகிருர்.

*   *   *

சைதாப்பேட்டை—இந்நகர் திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் கூட்டம 16-10-49 ஞாயிறு காலை 9மணிக்கு, சைதாப்பேட்டை மசூதித்தெரு 9-எண்ணுள்ள இல்லத்திலும், அன்று மாலை 5 மணிக்குக் கொடியேற்றுவிழா பஜார்ரோடு 87எண்ணுள்ளக்கழக இல்லத்திலும் நடைபெறும். டை நிகழ்ச்சிகளுக்கு தி. மு. கழக ஆர்வமுள்ளோரும், ஆதரவாளரும் வருகை தருமாறுத் தோழர் பி. அண்ணமலை (அமைப்பாளர்) வேண்டுகிருர்.

*   *   *

சின்ன சேலம்— இவ்வூர் திராவிடர் கழகம் 9-10-49ல் கூடி முடிவு செய்ய வேண்டியிருந்த நிகழ்ச்சி எதிர்பாரா விதமாக 16-10-49க்கு ஒத்திவைக்கும்படி நேரிட்டுவிட்டது. எனவே கழகத் தோழர்கள் இதையே அழைப்பாக ஏற்று 16—10—49ல் இவ்வூர் வள்ளலார் மிதிவண்டி நிலையத்திற்கு வந்து கூடும்படித்தோழர் ஏ. பொன்னம்பலம் கேட்டுக்கொள்கிருர்.

*   *   *

குறிஞ்சிப்பாடி— 16 - 10 - 49 ஞாயிறு காலை 10மணிக்கு, இவ்வூர் தமிழரசி வாசக சாலையில், தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகசெயற்குழுக் கூட்டம் நடைபெறும். மாவட்ட உறுப்பினர்கள் இதையே அழைப்பாக ஏற்று வருகை தருமாறுத் தோழர் சி. முனுசாமி வேண்டுகிருர்.

*   *   *

திண்டுக்கல்—இந்நகர் பகுத்தறிவுப்படிப்பகத்தின்செயற்குழுக்கூட்டம் 16-10-49 ஞாயிறு காலை 10 மணிக்கு டை படிப்பகத்தில் நடைபெறும. செயற்குழு உறுப்பினரனைவரும்இதனையே அழைப்பாக ஏற்று வருகைபுரியுமாறுத்தோழர் எம்.ஏ. கணேசன் (செயலாளர்) வேண்டுகிருர்.

*   *   *

ஓமலூர்—17-10-49 திங்கள் காலை 8-30 மணிககுஇவ்வூர் "நேரு டூரிங் டாக்கீஸில்" ஓமலூர் திராவிட முன்னேறறக் கழகத் துவக்க விழா நடைபெறும் அதுபோது, ஜலகண்டபுரம் தோழர் ப. கண்ணன் தலைமையில் தளபதி, சி. என். அண்ணுத்துரை எம.ஏ. அவர்கள் துவக்க விழாவாற்றி வைப்பார்கள். எனத்தோழர் க. முத்து மல்லப்பன் (செயலாளர்) அறிவிக்கிருர்

*   *   *

நாகப்பட்டினம்— 16—10—49 ஞாயிறு மாலை 6 மணிக்கு இவ்வூர் நீலா தெற்கு வீதி கழகக் கட்டிடத்தில் திராவிட முன்னேற்றக கழகம்-நாகைக் கிளையின் துவக்கவிழா நடைபெறும். அதுபோது பலர்கள் சொற்பொழி வாற்றுவார்கள். என நாகை தி. மு. கழகத்தினர் அறிவிக்கின்றனர்.

*   *   *

கோவை— 16-10-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு கோவை "கார்னேஷன் பார்க்" மைதானத்தில், தோழர் பெத்தாம்பாளையம். பி. பழனிசசாமி தலைமையில், கோவை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடைபெறும். அதுபோது, ம. தி. மு. கழகப்பொதுச் செயலாளர், அறிஞர் சி.என். அண்ணுத்துரை அவர்கள் சொற்பொழி வாற்றுவார்கள். தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம், மற்றும்பலரும்பேசுவார்கள். பெண்களுக்குத் தனியிடமுண்டு. என கோவை தி. கழகத்தினர் அறிவிக்கின்றனர்.

*   *   *

தஞ்சை— திராவிட முன்னேற்றக் கழகத்துவக்கவிழா, 16-10-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு இவ்வூர் திலகர் திடலில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் இ. வி. கே. சம்பத். என்.எஸ். இளங்கோ, என். எஸ். மணி, ஏ. கே. வேலன். தோழியர், இராமாமிர்தத்தம்மையார் ஆகியோர் சொற்பொழி வாற்றுவர்.

*   *   *

ஊத்தங்கால் புதுப்பட்டி — 15-10-19 சனி காலை 10-மணிக்கு என். கருப்பண்ணன் அவர்கள் இல்லத்தில் இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். அன்பர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு, வரும்படித் தோழர் என். ஆறுமுகம் அழைக்கிருர்.

*   *   *

மேட்டுப்பாளையம்— இவ்வட்டாரத்திலுள்ள சுற்றுக் கிராமங்கள் சேர்ந்த தி. மு. கழகக்கிளை அமைப்பதுபற்றி மேட்டுப்பாளையம் பெருமாள்கோவில் தெரு தோழர் கண்ணுச்சாமி அவர்கள் இல்லத்தில் ஓர் கூட்டம் நடைபெறும. எனவே அனைவரும் வருமாறுத் தோழர் ம நடராசன் வேண்டுகிருர்.

# தொழில் முறை!

இன்றைய தினம் ஜாவா சக்கரை வீசை 6 அணு வீதம் பாகிஸ்தானில விற்கிறது இந்தியாவில், பம்பாய் நகரம உளபட எந்த நகரத்திலும இநத நிலை இல்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் நான்கணு உறுப்பினராக உள்ள சககரைத் தொழிற்சாலை முதலாளிகளின் சிண்டிகேட் தலைவர், சிலநாளைக்கு முன் வெளியிட்ட அறிக்கையில், பெருவாரியாகச் சக்கரை கள்ளத்தனமாகப் பாகிஸ்தானுக்குக் கடத்திக் கொண்டுபோய் விட்டபடியால் தான, இந்தியாவில் சக்கரை விலையில் கூடிவிட்டு இருக்கிறது என்று அபாண்டமாகப்பேசி இருக்கிருர்"

# திகைக்கவோ...

[1-ம பக்கத் தொடர்ச்சி]

களுக்கு, எது எது விருப்பமோ அதை அதை அவர்கள் செய்ய முன்வரும் பொழுது, அதற்கான நியாயங்களைப்பேசுவர்—அதற்குத்தாமம்' என்றும பெயர் சூட்டுவர்! இதையில அவ்வளவிறகும் தேவையான அளவிறகு மேலாகவே மறுக்க முடியாத ஆதாரங்கள் இருப்பதாகப் பகட்டாகப் பேசுவர்! எதிர்த்துப பேசினுல் காங்கிரஸ் கட்சி, உயிரோடு விட்டேனே பார்! என்று உருட்டிமிரட்டும். காங்கிரஸ் ஆளவந்தார்களின் அடக்குமுறைகள், அதனைத் தொடர்ந்து பாம்பெனச் சீறி வரும்!

ஆர். எஸ எஸ் சங்கமென்றல எண்ணம் விரிகிறது - இருதயம் இளகுகிறது!

வேறு கட்சியினர் என்ருல், எண்ணம குறுகுகிறதுஇருதயம் இறுகிகிறது;

ஆர். எஸ் எஸ். சங்கத்தின் தொழுத கையுள்ளும் ஒடுங்கியுள்ள படையை காந்தியார் மாணத்துக்குப் பின்னரும்— பார்க்க மறக்கிருர் பட்டாபி!

மற்றவர் கூப்பியகரங்களில கறையிலலா திருப்பதைக் கண்ணாக்கண்டும். கறைபடுத்துகிருர்—கண்ணியத்தைக் காணாக், கண்கூசுகிரு!

கூடாத இடத்தில் அன்பு— அது காட்டப்பட வேண்டிய இடத்தில் கண்டிப்பு! கண்ணன் காட்டிய வழிபோலும்!

கருத்திலே மாறுபட்டவர்களை நசுக்கிவிட்டு வெற்றிபெறுவது கூடாது, மனமாற்றம் செய்வித்து வெற்றிபெறவேண்டுமென்று, ஆர். எஸ். எஸ். சங்கத்திற்குமட்டும்,புதுவிதிசெய்து தரும். பட்டாபியார், அதனை மறறக் கோட்பாட்டினர் விஷயத்திலும் காட்டப்படவேண்டிய பொதுவிதியாக மாற்றியிருந்தால், மகிழ்ச்சிக்குரியதாக இருந்திருக்கும். மனுவிடத்திலா நேர்மையை எதிர்பார்ப்பது!

காங்கிரசின் இந்தச் செயல் கண்டு, ஜபப்பிரகாஷ் கவலை கொள்வதுபோல், அதனுல் ஏற்படும் கேடுகளையும் களைய முன்வரவேண்டும். ஏதோ முன்னேற்றக் கருத்தைப் பேசி வருகிறோம் என்பதற்காகமட்டும்,ஆர எஸ். எஸ்- காங்கிரஸ எதிர்ப்புரட்சி அச்சைக் கண்டித்ததாகஇருந்து விடக்கூடாது! இந்தக் கூட்டுறவால், இத்துணைக் கண்டத்திற்கு ஏற்பட இருக்கும் கேடுகளை, முதல் முதலாக மக்களுக்கு விளக்கமாக உணர்த்தவேண்டும், விழிப்பை உண்டாக்கவேண்டும, பின்னா வீணர்களை விரட்ட வழி வகை செய்யவேண்டும். கதறுவது- கண்ணீர்விடுவது-மட்டுமே போதாது— சர்வாதிகாரிகளின் மனத்தை மாற்ற இந்த இரண்டும் போதாது! மக்களின் மனக் கண் மாறவும், அரசியல் அறிவு வளரவும், தீவிரமாகப் பிரசாரப் பணிபுரிவதுதான், இதற்கான சக்திவாய்ந்த மருந்து.

## சந்தா விவரம்

20—10—49 முதல்

3 மாதம் சந்தா ரு 6—0—0
6 மாதம் சந்தா ,, 12—0—0
ஒரு வருடசந்தா ,, 24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்.

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

## அதிராம்பட்டினம்—கிளை

அதிராம்பட்டினம், அக். 7—

இன்று காலை 10 மணிக்குத் தோழர் டி.எ. அகமது ஆஜா அவர்கள் இட்டகையில், தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்—அதிராம்பட்டினம கிளை" அமைக்கப்பட்டுக் கீழ்க் கண்ட புதிய செயற்குழுத் தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர்கள்:—டி.எ. அகமது ஆஜா; டி. குப்புசாமி. பொருள் உறுப்பினர் — பி. இராதாகிருஷ்ணன். விளம்பர உறுப்பினர்கள்- ஓ. எம். முகமது, எஸ். குஞ்சு. ஏனைய செயலுறுப்பினர்கள்—கே. எம். எ. அப்துல் ஹமீது, பி. எ. கழர், பி. எஸ். இபுராகிம், எஸ்.கே. எஸ். ஹனீபு, எஸ். எ. சுபான், எஸ். எம். இஸ்மாயில், எ. ஜி. வி. சீனிவாசன், பொன்னையன், எஸ். கே. என். செய்னு முகம்மது(மாணவப் பிரதிநிதி) ஆர். முனுசாமி, என். எஸ். இளங்கோ. மேலும நால்வரைச சேர்த்துக்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டது. பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. என விளமபர உறுப்பினர் அறிவிக்கின்றார்.

* * *

## சேலம் பொன்னம்மாப் பேட்டை-நகர உட்கிளை

பொன்னம்மாப் பேட்டை, அக். 7-

சேலம் பொன்னம்மாப்பேட்டையில், 7—10—49 அன்று சி. எ. நாகராசன் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதிபோது "திராவிட முன்னேறறக கழகம்—(சேலம் நகர்) பொன்னம்மாப் பேட்டை உட்கிளை" நிறுவப்பட்டு செயற்குழுவொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. பி. பழனிசாமி; துணைச் செயலாளர்-வி. எல். ராசு; நிதி உறுப்பினர்-பி. கே. மன்னூர்; விளமபர உறுப்பினர்-வி. டி. பெருமாள். ஏனைய செயற்குழுவினர்கள்:—பி.எ. முத்தியால், கே. வி. பிள்ளாரி, எஸ். வி. சுப்பிரமணியம், என். வி. சித்தையா, கே. ஜி. சின்னராசு, கே. வி. குருசாமி, கே. சி. அர்த்தனாரி, வி. எ. பெருமாள், சி. எ. நாகராசு. பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

## கயத்தார்—கிளை

கயத்தார், அக். 7—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக ஆரம்ப விழா "அண்ணா ஹாலி"ல் தோழர் மஞ்சமபி. எம்.எ. தலைமையில இன்று நிகழ்வுற்றது. தோழர் எம. ஜே. பாண்டியன் கழகக கொடியை ஏறறுவித்தார். பின்பு கீழ்க்கண்டசெயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—எம். சண்முகம்; துணைசெயலாளர் :— ஆவுடையப்பன்; நிதிஉறுப்பினர்:—ஆறுமுகம்; விளம்பர உறுப்பினர்கள்:-கணபதி, சந்திராதேவி. பின்னர், தோழர் தேவ சுந்தரம நன்றி கூறககூட்டம் முடிந்தது. எனததோழா எம். எஸ். தேவன் தீட்டுகிறார்.

* * *

## சேலம் காட்டூர்—நகர உட்கிளை

காட்டூர்(சேலம்), அக். 9—

இவ்வூர்த்தோழர் கே. சஙகரன் அவாகள இல்லத்தில் 8—10—49 அன்று தோழர் எஸ். ஆறுமுகம அவர்கள் தலைமையில் தி. மு. கழக அமைப்புககூட்டம நடைபெறறது. அவ்வமயம் காட்டூர்த் திராவிடர் கழகம கலைக்கப்பட்டுத், "திராவிட முன்னேற்றக் கழகம்-சேலம் நகர காட்டூர்உட்கிளை" நிறுவப்பட்டது. புதிய செயற்குழு வொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-கே. ஆர். சிரஙகன், துணைச் செயலாளர்—எஸ். ஆறுமுகம், பொருள் உறுப்பினர்கள— எ. சாமியப்பன், கே. ஆர். எல்லப்பன். விளம்பர உறுப்பினர்-எ. இராமசசந்திரன். ஏனைய செயற குழுவினர்கள்- கே. ஆர். இராமலிஙகம எஸ். மாணிக்கம, பி. கந்தசாமி, ஆர். மாணிக்கம, எ. மாரியப்பன், டி. எல்லப்பன், சி. சுப்பிரமணி, வி. மாணிககம், எம். சிரஙகன். சில தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

மறுநாள் காலையில் தோழர் எஸ். மாணிக்கம் அவர்களால் தி. மு. க. கொடியேற்றப்பட்டது. எனத் தோழர் கே. ஆர். சிரஙகன் (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

## ஆரணி—நகரக்கிளை

ஆரணி, அக். 9---

ஆரணி திராவிடர் கழகத்தின் செயறகுழுக் கூட்டம் 8-10-49ல் தோழர் ஆர். குட்டி அவர்கள் தலைமையில்நடைபெற்றது. அதுபோது ஆரணி திராவிடர் கழகம கலைக்கப்பட்டுத், "திராவிட முன்னேற்றக் கழகம்-ஆரணி நகரக்கிளை" அமைககப்பட்டது. கீழ்கண்ட செயற்குழுவும தேர்ந்தெடுககப்பட்டது.

செயலாளர்:-ஆர். குட்டி; துணைச் செயலாளர்கள்:— அ. சி. ராதாகிருஷ்ணன், சி. ஜெயராமன்; பொருள் உறுப்பினர்:-கோ. கேசவன்; விளம்பர உறுப்பினர்:- பு. ந. இராமகிருட்டினன். ஏனைய செயற்குழுவினர்:-எம்.வி.பாஸ்கரன், வி. பி. சாமி, அ. ப. நடராசன், தில்லை நடராஜன், டி.டி. அரசு, வி. சோமசுந்தரம், கே. மார்க்கபந்து, கே. பி.சுந்தரம், ஈ. இராதாகிருஷ்ணன், மு. கேசவன். எனத் தோழர் ஆர். குட்டி(செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

## சென்னை புதுப்பேட்டை—நகர உட்கிளை

சென்னை, அக். 9—

சென்னை, புதுப்பேட்டையில் 8-10-49 சனிமாலை 6 மணிக்கு தி. மு. கழக அமைப்புக் கூட்டம, தோழர் எஸ். டி. ராஜன் தலைமையில் நடைபெறறது. தலைமையுரைக்குப்பின், தோழர்கள் எ. எஸ். ஆதிரூபன், கோவிந்தராஜன், அப்பாசாமி ஆகியோர் தி. மு. க. நடவடிக்கைகளைக் குறித்துப் பேசினர்.

பின்பு தி. மு. கழகம், புதுப்பேட்டை வட்டம் என்பதை, "தி. மு. கழகம்—31 வது வட்டம் நகர உட்கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. ஓர் புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- எ. எஸ் ஆதிரூபன்; துணைசெயலாளர்-எஸ்.டி. ராஜன், நிதிஉறுப்பினர்-பி. டி.சீனிவாசன். மேற்கூறியவர்கள் தற்காலிகமாகப் பணியாற்றுவர். தீர்மான நிறைவேற்றத்திறகுப்பின் தலைவர் நன்றி கூறக் கூட்டம இனிது கலைந்தது. எனத் தோழர் எ. எஸ். ஆதிரூபன் அறிவிககிறார்.

* * *

## திருவண்ணாமலை—நகரக் கிளை

திருவண்ணாமலை, அக். 9—

இந்நகர திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக கூட்டம் இன்று காலை 10-மணிக்குத் தோழர் டி. எஸ். நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "திராவிட முன்னேறறக் கழகம்—திருவண்ணாமலை நகரக்கிளை அமைககப்பட்டு கீழ்க்காணும் செயற்குழுவினரும தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—ஆர். தர்மலிஙகம; பொருள் உறுப்பினர்:—மு. ர. தேவராசன்; விளம்பர உறுப்பினர்: வ. ரா. சண்முகம். ஏனைய செயற்குழுவினர்:-இரா. பெ. பாசாமன், மா. சண்முகம், ப. உ. சண்முகம், கோ. மாணிக்கம, கே. சண்முகம், மு. பழனி, எ. சந்திரன், டி. எஸ். கோபால், வி. பாலசுப்பிரமணியன், டி. கோபால். பின்பு தோழர். ப. உ. சண்முகம் (நகராண்மைக் கழகத் தலைவர்) தி. மு. கழகம் பற்றி சொற்பொழிவாற்றி நன்றி கூறக், கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

## திருவொற்றியூர்—நகரக் கிளை

திருவொற்றியூர், அக். 9—

இன்று மாலை இவ்வூர் கடற்கரையில் தோழர் எஸ. மாசிலாமணி அவர்கள் தலைமையில் திராவிடர் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, இவ்வூர் திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்-திருவொற்றியூர் நகரக் கிளை" என மாற்றப்பட்டது. பின் அமைப்பு முறைப்படி செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:- எஸ. கண்ணப்பன்; துணைச செயலாளர்:-எஸ. என். ஜகன்னாதன்; நிதி உறுப்பினர்:-எம். வி. ஆறுமுகம்; விளம்பர உறுப்பினர்:- சு. மாசிலாமணி. ஏனைய செயற்குழுவினர்:-எம. கணபதி, து. அழகுரத்தினம், இரா.தியாகராசன், எம. வி. வாசுதேவன், மா. கன்னையா, ஆர். தீனதயாள், கோ. மு. பாலன், டி. எஸ். சண்முகம், பின்பு செயலாளர் நன்றி கூறக், கூட்டம முடிவுற்றது. எனத் தோழர் சு. மாசிலாமணி (வி. உறுப்பினர்) வரைகிறார்.

* * *

## திருச்சி பெரியகடைவீதி — நகர உட்கிளை

திருச்சி, அக். 9—

இன்று காலை 10 மணிக்குத் தோழர் எஸ். நெடுமாறன் தலைமையில் தி. மு. கழக அமைபபுக் கூட்டம் நடைபெறறது. அதுபொழுது "திராவிட முன்னேற்றக் கழகம— திருச்சி நகர பெரியகடை வீதி உட்கிளை" அமைக்கப்பட்டுச, செயறகுழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஆ. அண்ணாமலை; துணைச் செயலாளர்:—சு. அருணன்; பொருள் உறுப்பினர்:—வி. புருஷோத்தமன்; விளம்பர உறுப்பினர்:—ரா. பா. சாரதி.

ஏனைய செயறகுழுவினர்:— ஆர். எல். ரஙகாச்சாரி, அ. நடராசன், பி இராதாகிருஷ்ணன், ஆர். எல். மாதவன், ஆர். எஸ். காந்தி, செ. காளி, எ. ஆர். ஷெரீப், வி. இராமசசந்திரன், ஈா. கி. சின்னையன், ந. மாதவன். தேவையாயின் மேறகொண்டும் செயலுறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கச செயளாருக்கு உரிமை அளிக்கப்பட்டது. பின்பு சில தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிந்தது. எனத் தோழர் ஆ. அணணாமலை (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

## குடியேற்றம் (வ. ஆ)-நகரக்கிளை

குடியேற்றம் (வ. ஆ), அக். 4—

இன்று இரவு 8 மணிககு இந்நகர் திராவிடர் கழகப் படிப்பகத்தில், தோழர் எம். கே. சண்முகம தலைமையில், ஓர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது குடியேற்றம் நகர திராவிடர் கழகம "திராவிட முன்னேற்றக் கழகம்—குடியேற்றம நகரக கிளை" என மாறறியமைககப்பட்டுப் புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம. கே. சண்முகம்; துணைச்செயலாளர்:—எஸ். துளசி; விளம்பர உறுப்பினர்:— க. அப்பாதுரை.

ஏனைய செயலுறுப்பினர்கள் :— முருகேசன், வீரபததிரன், வி. கே. தனபால், வி. டி. கிருஷ்ணமூர்த்தி, ஜி. வி. நடராசன், ஆளவந்தார், தண்டாயுதபாணி, சுப்பிரமணியம், புருஷோத்தமன், காஜாகாகப், பார்த்தசாரதி. பின்பு நன்றி கூறலுடன் இனிது முடிந்தது. எனத் தோழர் எம். கே. சண்முகம (செயலாளர்) தெரிவிக்கிறார்.

[முன்பு "குடியேற்றம கிளை" என்று வந்ததை "சந்தைப் பேட்டைக் கிளை" என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.]

* * *

## உதகமண்டலம்—நகரக்கிளை

உதகை; அக். 7—

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் வழக்கறிஞர், தோழர் கிருட்டினசாமி அவர்கள் தலைமையில் இன்று நடந்த கூட்டத்தில், உதகை திராவிடர் கழகச்செயற குழு உறுப்பினர்கள், தி. கழகத்தை விட்டுவிலகி "திராவிட முன்னேற்றக் கழகம்-உதகை நகரக் கிளை" அமைத்தனர். புதிய செயற குழுவும தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர்:-எஸ். எம. சஞ்சீவிராசு; பொருள் உறுப்பினர்:— கே. ஆர். பழனியப்பன், விளம்பரஉறுப்பினர்-தி.சி. இராமு. ஏனைய செயற்குழுவினர்:— என. எஸ். எம். ஆறுமுகம், பீ. ஆறுமுகம், உசேன், சந்திரனூர், அ. பாலகிருட்டினன், டி. டி. கண்ணன், கோவிந்தராசன், வழக்கறிஞர் எம். கிருட்டினசாமி (ஆய்வுரை கூறுவோர்). பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. எனத தோழர் எஸ். எம் சஞ்சீவிராசு (செயலாளர்) தீட்டுகிறார்.

* * *

## சேத்துப்பட்டு— சிற்றூர்க் கிளை

சேத்துப்பட்டு, அக். 8—

சேத்துப்பட்டு (போளூர்) திராவிடர்க் கழக செயறகுழு கூட்டம், கழகக் கட்டிடத்தில் 8-10-49காலை 10-மணிக்கு நடைபெற்றது. அதுபொழுது, தி. கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்— சேத்துப்பட்டுச் சிற்றூர்க் கிளை" என மாறறப்பட்டது. பின்னர் சில தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம இனிது முடிந்தது. தோழர் சா. கோவிந்தன் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. எனச செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

## குளத்தூர்—சிற்றூர்க் கிளை

குளத்தூர், அக். 9—

இன்று காலை 10-மணிக்கு இவ்வூர் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் த. சீனியப்பன் தலைமையில் நடை பெற்றது. அப்பொழுது திராவிடர் கழகம "திராவிட முன்னேற்றக் கழகம்-குளத்தூர் சிறறூர்க் கிளை" என மாற்றப்பட்டுக் கீழ்க் கண்ட செயற குழு உறுப்பினர்கள தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். செயலாளர்-த. சீனியப்பன், துணைச செயலாளர்-ப. சுடலை முத்து, விளம்பர உறுப்பினர்-மு. இரா. சபாபதி, பொருள் உறுப்பினர் — இரா. கருப்பசாமி. ஏனைய செயலுறுப்பினர்கள்—நீதிராஜன், கு. தஙகச்சாமி, கு. முத்தையா, சிவன் முத்தையா, சி. தொந்தி ராஜன், பெ. ந. ராஜன், ப. ராஜபாண்டியன். எனத் தோழர் மு. இரா. சபாபதி (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

## வடுகப்பட்டி—சிற்றூர்க் கிளை

வடுகபபட்டி, அக். 8—

பெரிய குளம் தாலுகா, வடுகபட்டியில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், இன்று மாலை 2-50 மணிக்கு "முருகுசசோலை"யில் நடை பெற்றது. அதுபொழுது, தோழா பூமி நாதன் தலைமையில் "திராவிட முன்னேற்றக் கழகம்-வடுக்கப்பட்டிசசிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டு, புதிய செயற்குழு வொன்று தேர்தெடுககப் பட்டது.

செயலாளர்:—கா. காமாட்சி, துணைசெயலாளர்-கா. குப்புசாமி, பொருள் உறுப்பினர்-மருதை வீராசாமி, விளம்பர உறுப்பினர்—ரா. கூடலிஙகம். ஏனைய செயலுறுப்பினர்கள்-முத்துக் கருப்பன், பூமிநாதன், பாலு, பசமசிவம், பெத்தனசாமி, பொன்ராஜ், வரதாரசுலு, குருசாமி, மஞ்சநிதி. எனத்தோழர் ரா. கூடலிஙகம் (வி. உறுப்பினர்) அறிவிக்கிறார்.

## திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகள்

கீழ்க்கண்ட முகவரிகளில் தி மு. கழகக் கொடிகள் இலவசமாகத் தைத்துக் கொடுக்கப்படும்.

1. என். கே. யாகூப், டைலர், கடைவீதி, கோபிச் செட்டிப் பாளையம்.
2. ரத்னா தையல் நிலையம், எண. 10, தெறகு மார்ட், தெற்கு வாசல், மதுரை.
3. ரா தஙகவேல, டைலர், வி. ஈ. ரோடு, தூத்துக்குடி.
4. சே. காமாட்சி பாண்டியன், திராவிடன் தையல் நிலையம், கல்லூரணி.
5. சி. ஜெயராமன், தையல் கடை, மார்கட் ரோடு, ஆரணி(வ ஆ).

## திராவிடர் பகுத்தறிவு இளைஞர் மன்றம்

திருவானைக்காவல், அக். 6—

இம்மன்றத்தின் செயற் குழுக் கூட்டம் 2—10—49ல் கூடி, கீழ்க் கண்ட தீர்மானஙகளை நிறைவேற்றிற்று.

தீர்மானஙகள் :— 1. திராவிடர் நலன் கருதி திராவிட முன்னேறறக் கழகததை அமைத்துத் தந்த தோழர் அண்ணாத்துரை அவர்களையும், மறற முக்கியஸ்தர்களையும இககழகம் பாராட்டுகிறது.

2. சிரஙகம் திருவானைககாவல் தி. மு. கழகம அமைத்தத் தோழர்களையும் இக்கழகம் பாராட்டுகிறது.

3. "விடுதலை" ஜாமீனுக்கென வசூலிக்கப்பட்ட பணத்தை "விடுதலை"க்கு அனுப்பாமல் சிரஙகம், திருவானைக்காவல், தி. மு. கழகத் துவக்கவிழாவுககுசசெலவழிப்பது. என்று தோழர் செ. மருதநாயகம எழுதுகிறார்.

வெளிவந்துவிட்டன :

**கடைசி முத்தம்**
இளமைப்பித்தன்
சிறுகதைத தொகுபபு ரூ. 0-8-0

**மதம் அவசியமா?**
கட்டுரைகள பதினொன்று.
அரிய சிநதனைவிருந்து ரூ. 0-12-0

**அஞ்சலை**
தில்லை வில்லாளன் தீட்டிய
சிறுகதை ரூ. 0-4-0

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு. ரூ. 5-க்கு மேற்பட்ட ஆர்டர்கட்கு அனுப்பும் செலவு இனம்.
உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள்.

-:செந்தமிழ்ப் பதிப்பகம்:-
த. பெ. 39, புதுக்கோட்டை.

எங்கள் புதிய வெளியீடுகள்

**வால்காவிலிருந்து :: :: கங்கை வரை**

கி. மு. 6000-த்திலிருந்து கி. பி. 1942 வரை மனித சமுதாயததின வளர்ச்சியைப்புரிந்துகொளவதறகு, சரித்திரததையும் ஆராய்ச்சி நூலகளையும படிபபதால ஏறபடும் சலிபபுத்தோனறாதபடி, கதை உருவததிலே சித்திரித்திருக்கிறார்
ராகுல சாங்கிருத்தியாயன்
விலை ரூ. 5.

**தூக்குமேடைக் குறிப்பு**

ஜூலியஸ் பூசிக்
நாஜிச சிறையிலே மரண வேதனையை அனுபவிதத ஒரு சுதநதிர பிரியனின கடைசி வாககுமூலம, மரண வாககுமூலததிலே சாகரட்டீஸினுடையதறகுப பின வந்ததில் இதுதான் தலைசிறநதது என்று பலராலும பாராட்டபபட்டிருககிறது.
விலை ரூ. 1.

தமிழ் புத்தகாலயம்,
மயிலாப்பூர் :: சென்னை-4.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.